# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**மனு எண். 728/நகராட்சி/2019**

**நாள் : 10/09/2019**

திரு S. இராமசாமி,
மேட்டூர். – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி,
மேட்டூர். – **எதிர் மனுதாரர்**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, காவேரி நகர், பியூன் குவார்டர்ஸ், L3.20-155 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு S. இராமசாமி அவர்களின் மனு 24.06.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் வரப்பெற்றது. மனுதாரரின் கோரிக்கை குறித்து நகராட்சி ஆணையர் (பொறுப்பு) அவர்களின் விளக்கம் பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, காவேரி நகர், பியூன் குவார்டர்ஸ், L3.20-155 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு S. இராமசாமி என்பவர் தான் மேட்டூர் நகராட்சியில் உதவியாளராகப் பணியாற்றி 31.05.1996–இல் ஓய்வு பெற்றதாகவும், ஓய்வு பெற்று 23 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தனது சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் மனுச் செய்திருந்தார். மேட்டூர் நகராட்சி ஆணையாளரிடம் மனுதாரரின் முறையீடு குறித்து 27.06.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தின் முன் ஆஜரான மேட்டூர் நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) அவர்களிடம் அறிக்கை கோரப்பட்டது. ஓய்வு பெற்ற நகராட்சி உதவியாளர் திரு S. இராமசாமி, என்பவருக்கு வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகை 2004–05 ஆண்டு முடிய கணக்கிடப்பட்டு ரூ.41,887/– பாரத ஸ்டேட் வங்கியின் 26.06.2019 நாளிட்ட காசோலை எண்.344051 மூலம் வழங்கப்பட்டு விட்டது என்று தெரிவித்து மேற்குறிப்பிட்ட காசோலையின் நகலினை தனது 26.06.2019 நாளிட்ட அறிக்கையுடன்

சமர்ப்பித்தார். மனுதாரரின் 23 ஆண்டு கால கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கைையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.**

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு S. இராமசாமி,
   L3-20–155, பியூன் குவார்ட்ரஸ்.
   காவேரி நகர், மேட்டூர் அணை.
   சேலம் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   மேட்டூர் நகராட்சி,
   மேட்டூர்.

நகல் : { முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி